செ.வெ.எண்:24 நாள்:12.07.2018

# வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகை பெற 31.08.2018-க்குள் விண்ணப்பிக்கவேண்டும் - மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் சீ.சுரேஷ்குமார்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

தமிழகத்தில் படித்துவிட்டு வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து, எவ்வித வேலைவாய்ப்பும் கிடைக்காமல் காத்திருக்கும் இளைஞர்களின் துயரினை துடைக்கும் வகையில் வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகை திட்டத்தினை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை செயல்படுத்தி வருகின்றது. இந்த திட்டத்தின்கீழ், தொகை உயர்த்தப்பட்டு தற்போது மாதம் ஒன்றுக்கு எஸ்எஸ்எல்சி தேர்ச்சி பெறாதவர்களுக்கு ரூ.200/-ம் தேர்ச்சி பெற்றவர்களுக்கு ரூ.300/-ம் மேல்நிலைக்கல்வி தேர்ச்சி பெற்றவர்களுக்கு ரூ.400/-ம் மற்றும் பட்டதாரி/முதுநிலை பட்டதாரிகளுக்கு ரூ.600/-வீதம் 3 ஆண்டுகளுக்கு வழங்கப்படுகிறது.

இந்தத் திட்டத்தின்கீழ் 01.07.2018 முதல் 30.09.2018 முடியவுள்ள இந்த காலாண்டுக்கு பயன்பெற மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து தொடர்ந்து பதிவினை புதுப்பித்து வருபவர்கள் கடந்த 30.06.2018 தேதியின் நிலவரப்படி குறைந்தபட்சம் 5 ஆண்டுகளுக்கு மேல் வேலைவாய்ப்பு அலுவலக உயிர்ப்பதிவேடுகளில் காத்திருப்பவராக இருக்க வேண்டும். மேலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் 45 வயதிற்கு மிகாமலும் இதர வகுப்பினரை பொறுத்தமட்டில் 40 வயதிற்கு மிகாமலும் இருக்கவேண்டும். மனுதாரரின் குடும்ப மாத வருமானம் ரூ.4166/-க்கு (ரூபாய் நான்காயிரத்து நூற்று அறுபத்தாறு மட்டும்) அல்லது ஆண்டு குடும்ப வருமானம் ரூ.50,000/-க்கு (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) மிகாமலும் இருக்கவேண்டும். வருமானச்சான்று வருவாய் ஆய்வாளரிடம் அலுவலக முத்திரையுடன் தனியே பெறுதல் வேண்டும். தேசிய மயமாக்கப்பட்ட இ.சி.எஸ் வசதியுடைய வங்கியில் இம்மாவட்டத்தில் கணக்கு தொடங்கி இருத்தல் வேண்டும். அவசியம் தங்களது வங்கிக்கணக்கினை ஆதார் எண்ணுடன் இணைத்திருக்கவேண்டும். ஏற்கனவே இத்திட்டத்தின்கீழ் பயன்பெற்றுவரும் மற்றும் மூன்றாண்டுகள் உதவித்தொகை பெற்ற பயன்தாரர்கள் விண்ணப்பிக்கத் தேவையில்லை.

முழுமையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை அனைத்து அசல் கல்விச் சான்றுகள், வேலைவாய்ப்பு அலுவலக அடையாள அட்டை மற்றும் வங்கிக் கணக்குப் புத்தகம் ஆகியவற்றுடன் அரசு விடுமுறை தினங்கள் மற்றும் சனி,ஞாயிறு தினங்கள் தவிர மற்ற வேலைநாட்களில் நாகப்பட்டினம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பிற்பகல் 02.00 மணிக்குள் 31.08.2018 தேதிக்குள் நேரில் ஒப்படைக்கவேண்டும். விண்ணப்பித்தவர்களில் தகுதி உள்ள அனைவருக்கும் 01.07.2018 முதல் உதவித்தொகை வழங்கப்படும் என மாவட்ட ஆட்சியர் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.சீ.சுரேஷ்குமார்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**